**செய்தி வெளியீடு எண்: 300** **நாள்: 06.06.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் மற்றும் சட்டமன்ற அறிவிப்புகள் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் இன்று **06.06.2013** சென்னை தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அரிசி ,பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பு, மாண்புமிகு அம்மா அவர்களால் வெளிச்சந்தையில் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தின் முன்னேற்றம். சட்டப்பேரவையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகள் குறித்த நடவடிக்கை, மானிய கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகள் குறித்த நடவடிக்கைகள், குடும்ப அட்டைகள் விநியோகம் குறித்தும் மற்றும் உணவுப்பொருள் கடத்தல் தடுப்புப்பிரிவு பணி முன்னேற்றம் ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக்குப்பின் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தரமான விலையில்லா அரிசி ஒரு கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் உணவுத்துறைக்கு 4,900 கோடி ரூபாயை மானியமாக ஒதுக்கி தந்துள்ளார்கள். வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் தடுக்கும் நடவடிக்கையாக 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம் மூலம் இதுவரை 1377 மெ.டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோகம் உட்பட ஏனைய அனைத்து திட்டத்திற்கும் தேவையான அரிசி முதலான அத்தியாவசிய பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

மேலும் பொது மக்களுக்கு வழங்கப்படும் அரிசி தரமானதாகவும், எவ்விதமான புகாருக்கும் இடம் கொடுக்காமல் உரியவர்களுக்கு, உரிய நேரத்தில் விநியோகம் செய்யப்பட வேண்டுமென அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது அரசு உணவுத்துறை செயலாளர் திருமதி.M.P.நிர்மலா,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.M.சந்திரசேகரன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீதாராமன்,இ.ஆ.ப., உணவுப்பொருள் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் காவல் துறை தலைவர் திரு. கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., உணவுப்பொருள் வழங்கல் துறை இணை ஆணையர் திருமதி. P.ரமணசரஸ்வதி, மற்றும் பொது மேலாளர் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**